உ

அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் பாடல்
எழுதியவர் : நா ரவி ரங்கசுவாமி 
+ 91 9942684099

*ஓம் குரு ஸ்ரீ ஹரிஹரசுதன் ஐயன் ஐயப்ப சுவாமி
சபரிமலை தர்ம சாஸ்தாவே சரணம் ஐயப்பா

**ஓம் மணிகண்ட முத்தையனே சரணம் ஐயப்பா
ஓம் சக்கரை அய்யப்பனே சரணம் ஐயப்பா
ஓம் மச்சக்கார அய்யப்பனே சரணம் ஐயப்பா
ஓம் வல்லபை அய்யப்பனே சரணம் ஐயப்பா

1 *தத்வமசி தத்வமசி தத்வமசி
தர்மசாஸ்தா சொல்லுகிறார் தத்வமசி
*நீயேநான் நானேநீ தத்வமஸி
நீயேநான் நானேநீ தத்வமஸி
*தத்வமஸி தத்வமஸி தத்வமஸி
தர்மசாஸ்தா சொல்லுகிறார் தத்வமஸி
*நானேநீ நீயேநான் தத்வமஸி
நானேநீ நீயேநான் தத்வமஸி --- [தத்வமசி..]

2 *நீ நல்லா இருக்கோணும் அய்யப்பா
எங்களையும் நல்லபடி வாழ வைக்கணும் அய்யப்பா
*நம்ம நாடு முன்னேறணும் ஐயப்பா
எல்லோரையும் நல்லபடி வாழ வைக்கணும் ஐயப்பா
*பசி பட்டினி பஞ்சம் நீங்கிட அய்யப்பா
முப்போகம் சாகுபடி விளையணும் ஐயப்பா
*இயற்கையை பேணிக் காத்திடு ஐயப்பா
பிரபஞ்சத்தயும் நல்லா இயங்க செய்திடு அய்யப்பா

3 *ஐயப்பா ஐயப்பா சபரிமலை ஐயப்பா
அருளப்பா அருளப்பா வேண்டுதல் அருளப்பா
*என்னப்பா ஐயப்பா எங்களை நீ காணப்பா
தர்மசாஸ்தா ஐயப்பா என்றென்றும் அருளப்பா
*அருள்மிகு ஐயப்பா ஆனந்தம் அருளப்பா
எழில்மிகு ஐயப்பா ஏழ்மையை நீக்கிடப்பா
*தமிழ்மிகு ஐயப்பா தடைகளை உடைத்திடப்பா
தமிழ்மிகு ஐயப்பா தரணியெல்லாம் காத்திடப்பா

4 *தங்கத் திருமேனி அய்யப்பா - உன்
தங்கத் திருமேனி அய்யப்பா
தகதகன்னு ஜொலிக்குது அய்யப்பா
*நெய்யபிஷேகம் நடக்குது அய்யப்பா - உனக்கு
நெய்யபிஷேகம் நடக்குது ஐயப்பா
நெய்வாசம் மணமணக்குது அய்யப்பா
*புஷ்பாபிஷேகம் நடக்குது அய்யப்பா - உனக்கு
புஷ்பாபிஷேகம் நடக்குது அய்யப்பா
புதுமலர் வாசனை பரவுது அய்யப்பா
*அன்னதானம் நடக்குது அய்யப்பா - அம்பலத்தில்
அன்னதானம் நடக்குது அய்யப்பா
பக்தர்களின் பசி அடங்குது அய்யப்பா

**ஓம் கைவிடேயப்பர் அய்யப்பனே சரணம் ஐயப்பா
ஓம் வெள்ளித்தடி அய்யப்பனே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ சக்கரபீட அய்யப்பனே சரணம் ஐயப்பா
ஓம் வீராசனபீட அய்யப்பனே சரணம் ஐயப்பா
--- [தத்வமசி..]

5 குடும்பம் குடும்பமா கும்பிடுறோம் ஐயப்பா
பரம்பர பரம்பரயா கும்பிடுறோம் ஐய்ப்பா
குலதெய்வமாகவே கும்பிடுறோம் அய்யப்பா
இஷ்டதெய்வமாகவும் கும்பிடுறோம் அய்யப்பா
நினைத்த காரியம் நிறைவேற்றும் அய்யப்பா
சகல ஐஸ்வர்யங்களும் தரும் ஐயப்பா
நிம்மதியும் சந்தோஷமும் தரும் அய்யப்பா
நீண்ட ஆயுள் ஆரோக்கியம் தரும் ஐயப்பா

6 அரியும் சிவனும் ஒன்றான அய்யப்பா
வாவரை தோழராய் கொண்டவரே அய்யப்பா
மதநல்லிணக்கம் பேணிகாக்கும் ஐயப்பா
மதங்கள் கடந்தும் வணங்கப்படும் அய்யப்பா

7 *கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
அய்யப்பா நாங்கள் ஒன்றாய்
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
*கூடி கும்பிட்டால் கோடி நன்மை
அய்யப்பா நாங்கள் உன்னைக்
கூடி கும்பிட்டால் கோடி நன்மை

8 *நலம் தரும் அய்யப்பா
நல்லதெல்லாம் தரும் ஐயப்பா
*பலம் தரும் அய்யப்பா
மனபலம் உடல்பலம் தரும் அய்யப்பா
*வளம் தரும் ஐயப்பா
வளர்ச்சியை தந்திடும் ஐயப்பா
*பணம் தரும் அய்யப்பா
கோடீஸ்வரயோகம் தரும் ஐயப்பா

+ 91 9942684099

**ஓம் அதிசய சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் கல்யாண சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் பட்டமுடையார் சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் அஞ்சனம் எழுதிய கண்டன் சாஸ்தாவே சரணம் ஐயப்பா
--- [தத்வமசி..]

9 அச்சன்கோவிலில் பாலசாஸ்தா
ஆரியங்காவில் குடும்பஸ்தர்
சபரிமலையில் பிரம்மச்சாரி
நமக்கெல்லாம் ஆன்மிக குரு

10 புலி வாகன பாலசாஸ்தா சரணம் சரணம்
குதிர வாகன ராஜசாஸ்தா சரணம் சரணம்
யானை வாகன தர்மசாஸ்தா சரணம் சரணம்
எல்லை காக்கும் காவல்சாஸ்தா சரணம் சரணம்

11 விதியையே வெல்லவைக்கும் அய்யப்பா
மதியாலே வாழவைக்கும் அய்யப்பா
சதிகளை உடைக்க வைக்கும் ஐயப்பா
சாதி மதம் கடந்தருளும் ஐயப்பா

12 ஐயப்பனுக்கே ஊழியம் செய்வோம்
ஐயனருளாலே ஊழ்வினை களைவோம்
சனிக்கிரக தோஷமெல்லாம் போயிடும்
நவக்கிரக தோஷமெல்லாம் போயிடும்

**ஓம் ஆதி அய்யனாரே சரணம் ஐயப்பா
ஓம் சொரிமுத்து அய்யனாரே சரணம் ஐயப்பா
ஓம் பூனைக்குத்தி அய்யனாரே சரணம் ஐயப்பா
ஓம் பூர்ணா புஷ்கலா சமேத அய்யனாரே சரணம் ஐயப்பா
--- [தத்வமசி..]

+ 91 9942684099

13 *சபரிமலை யாத்திரை ஐயப்பா
ஆன்மிக சுற்றுலா ஐயப்பா
*மண்டல பூஜை வழிபாடு அய்யப்பா
மகிமையாய் நடக்குது அய்யப்பா
*திருவாபரண ஊர்வலம் ஐயப்பா
விமரிசையா நடக்குது அய்யப்பா
*மகரஜோதி தரிசனம் ஐயப்பா
ஜெகஜோதியாய் தெரியுது அய்யப்பா

14 *ராஜாவுக்கெல்லாம் ராஜாவே சரணம் ஐயப்பா
பந்தள ராஜாவே சரணம் ஐயப்பா
*குருவுக்கெல்லாம் குருவே சரணம் ஐயப்பா
குருசாமிகளின் குருவே சரணம் ஐயப்பா
*சாமிக்கெல்லாம் சாமியே சரணம் ஐயப்பா
எல்லா சாமிக்கெல்லாம் சாமியே சரணம் ஐயப்பா
*நம்பினவர்க்கெல்லாம் துணையே சரணம் ஐயப்பா
வழித்துணையாய் வந்தருளும் சரணம் ஐயப்பா

15 *எங்க பாட்டனும் பூட்டனும்
உன்னத்தான் கும்பிட்டாங்க அய்யப்பா
*இந்த ஜென்மத்தில நாங்களும்
உன்னத்தான் கும்பிடுறோம் ஐயப்பா
*எங்க பேரனும் பேத்தியும்
உன்னத்தான் கும்பிடுவாங்க அய்யப்பா
*இந்த ஊரும் உலகமும்
உன்னத்தான் கும்பிடுது அய்யப்பா

16 *எத்தனை எத்தனை பிறவி எடுத்தாலும்
உன்னத்தான் கும்பிடுவோம் அய்யப்பா
*எப்படி எப்படி பிறவி எடுத்தாலும்
உன்னத்தான் கும்பிடுவோம் அய்யப்பா
*நீ இருக்குமிடம் தேடிவந்தே
உன்னத்தான் கும்பிடுவோம் ஐயப்பா
*மானசீக வழிபாட்டாலே
உன்னத்தான் கும்பிடுவோம் அய்யப்பா --- [தத்வமசி..]

**ஓம் கன்னிமூலை கணபதியே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகை புரத்து அம்மாவே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதாவே சரணம் ஐயப்பா
ஓம் வல்லபை அம்மனே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பசாமியே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பாயி அம்பாளே சரணம் ஐயப்பா
ஓம் கொச்சுக் கடுத்த சுவாமியே சரணம் ஐயப்பா
ஓம் வலிய கடுத்த சுவாமியே சரணம் ஐயப்பா
ஓம் ஆவேசக் கருப்பனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராஜாவே சரணம் ஐயப்பா
ஓம் நாகதேவியே சரணம் ஐயப்பா
ஓம் நாக யக்ஷியே சரணம் ஐயப்பா

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா * [தத்வமசி..]

எழுதியவர் : நா ரவி ரங்கசுவாமி
+ 91 9942684099

---